**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.77/2017**

2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை வாதியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 பாக்கியலட்சுமி, 63 வயது, க/பெ சுகுமாரன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி 1, 2,6,7 தரப்பில் குறுக்கு விசாரணை)**

தாவா வழக்கை யார் யார் தாக்கல் செய்துள்ளது என்றால் நான், ரவிக்குமார். கோகிலவேணி மற்றும் புருஷோத்தமன் ஆகியோருடன் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் என்ன என்றால் பாஸ்கரன் தகராறு செய்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கில் உள்ள சர்வே எண். விஸ்தீரணம் மற்றும் ஜக்பந்தி எனக்கு தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாவா வழக்கில் யார் வழக்கறிஞரை பார்த்து வழக்கு தாக்கல் செய்தது என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் வழக்கறிஞரை பார்த்து வழக்கை தாக்கல் செய்தோம்.

2. சுகுமாரன் என்னுடைய கணவர் என்றால் சரிதான். அவரை இவ்வழக்கில் எதிர் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் தெரியாது. நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதியாக என் கணவரை சேர்த்துள்ளேன் என்றாலும் அதற்கான காரணத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டியது அவசியம் என்றால் பவர் அவர் மேல் கொடுத்து பிரதிவாதி 1 மற்றும் அவருடைய தந்தை சேர்ந்து பணத்தை வாங்கி கொண்டு தற்போது தகராறு செய்கிறார்கள். சொத்து ராதாகிருஷ்ணனுக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்றாலும் பணத்தை பிரித்து கொண்டார்கள் என்பது பொய் என்றாலும் அவ்வாறு நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. மனைப் பிரிவு போட்டு பிரித்தார்கள் என்று சொல்லியுள்ளேன். அதுப்போல் எத்தனை மனைப் பிரிவு போட்டார்கள் என்றால் சுமார் 20 மனைகள் இருக்கும். அது 2001ம் ஆண்டு நடந்தது. மனைப் பிரிவு போட்ட போது ராதாகிருஷ்ணனுக்கும் அவரது மகன்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. ராதாகிருஷ்ணன் முதல் மனைவி ராஜேஸ்வரி காலம் ஆன போது பாஸ்கரனுக்கு எத்தனை வயது என்றால் 5 வயதிலிருந்து 6 வயதிருக்கும், 1ம் வகுப்பு படித்து கொண்டிருந்தார். அவர் தம்பி யுவராஜ்க்கு 3 வயதிருக்கும் என்றால் சரிதான்.

4. ராஜேஸ்வரி காலமான போது அவருடைய மாமனார் சோமசுந்தர செட்டியார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணன் முதல் மனைவி இறந்து எத்தனை வருடம் கழித்து 2வது மனைவி யசோதம்மாளை திருமணம் செய்தார் என்றால் 1 1/2 வருடம் கழித்து திருமணம் செய்தார். ராதாகிருஷ்ணன் மேற்படி 2வது திருமணம் செய்த போது சோமசுந்தர செட்டியார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான்.

5. ராஜேஸ்வரி காலமான பின் சோம சுந்தர செட்டியார் காலமாகும் வரை பாஸ்கரன் மற்றும் யுவராஜ் சோமசுந்தர செட்டியார் பராமரிப்பில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

நானும் என் குடும்பத்தாரும் தனி தனியாகதான் வசித்து வந்தோம் என்றாலும் ராஜேஸ்வரி காலமான பின் சோம சுந்தர செட்டியார் காலமாகும் வரை பாஸ்கரன் மற்றும் யுவராஜ் சோமசுந்தர செட்டியார் பராமரிப்பில் இருந்து வந்தார்கள் என்றாலும் சரிதான். என் கணவரின் கடைசி தம்பி தேவகுமாருக்கு திருமணம் ஆகும் வரை நாங்கள் ஒன்றாகதான் இருந்தோம்.

6. என் கணவரின் கடைசி தம்பி தேவகுமாருக்கு திருமணம் ஆன பின்பு நாங்கள் தனி தனியாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். அவருக்கு 1992ல் திருமணம் நடந்தது. தேவகுமாருக்கு திருமணம் ஆன பின்பு பாஸ்கரனுக்கு எத்தனை வருடம் கழித்து திருமணம் நடந்தது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வ.சா.ஆ. 4,வ.சா.ஆ.5,வ.சா.ஆ.6 ஆகிய 3ம் சாப்பதிவாளர் அலுவலத்தில் மனு செய்து பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 3 ஆவணங்களும் என் கணவர் பெயரில் மனு கொடுத்துதான் பெறப்பட்டது என்றால் சரிதான்.

7. 4 பேர் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்திருக்கும் நிலையில் என் கணவர் பெயரில் மனு செய்து சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து ஆவணங்களை பெற்றதற்கு காரணம் என்ன என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் என் கணவர் சொல்லிதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் கணவர் சொல்லி சாட்சியம் அளிக்கவில்லை. என் மாமனார் சோமசுந்தர செட்டியார் மற்றும் என் மாமியார் சாலம்மாள் இருவரும் இறந்த பின்பு என் கணவர் மற்றும் அவரது உடன் பிறந்தவர்கள் பாகப்பிரிவினை 2001ம் ஆண்டு ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான்.

8. மேற்படி பாகப்பிரிவினையில் ராதாகிருஷ்ணனுக்கும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பாஸ்கரன் மற்றும் யுவராஜ் ராதாகிருஷ்ணன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகப் பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் முதல் மற்றும் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது அனைவருக்கும் தெரியும் என்றாலும், எனக்கும் அதுப் பற்றி தெரியும் என்றால் எனக்கு தெரியாது. 2001ம் ஆண்டு ராதாகிருஷ்ணனுக்கு ஒதுக்கப்பட்ட பாகப்பிரிவினையில் பாஸ்கரன் மற்றும் யுவராஜ்க்கு பாகம் உண்டு என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

9. ராதாகிருஷ்ணன் பாஸ்கரன் மற்றும் யுவராஜ்க்கு பாகம் கொடுக்க கூடாது என்பதற்காகதான் என் கணவர் பெயரில் பவர் ஆவணம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் அது செல்லாது என்றாலும் அதன் பெயரில் மனைகள் விற்கப்பட்டதும் செல்லாது என்றாலும் 3 பேர் சேர்ந்து பணத்தை பெற்று கொண்டு பொது அதிகார பத்திரத்தை கொடுத்தார்கள். தற்போது தகராறு செய்கிறார்கள். எனக்கும் பாஸ்கரனுக்கும் 2001ல் இருந்து பிரச்சினை உள்ளதா என்றால் இல்லை. அதற்கு பின்புதான் பிரச்சினை ஏற்பட்டது. எந்த வருடம் என்று எனக்கு நினைவில்லை.

10. வழக்கு தாக்கல் செய்வதற்கு 4 மாதங்களுக்கு முன்பு புல்டவுசர் வைத்து என் நிலத்தை சமன்படுத்த வந்தார்கள். என் மனையின் எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நிலத்தை தற்போது யார் அனுபவித்து கொண்டிருக்கிறார்கள் என்றால் ராதாகிருஷ்ணன்

அனுபவித்து வருகிறார். **சாட்சி மீண்டும் தன்னிச்சையாக நான் தான் மேற்படி நிலத்தை அனுபவித்து வருகிறேன் என்று கூறுகிறார்.** 2001ல் இருந்து இன்றைய தேதி வரை நீங்கள் எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி இடம் எங்களுடையதுதான். நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம்.

11. இந்த சொத்து எனக்கு உரிமையில்லாத சொத்து என்றாலும், அதற்கான தடையை நீக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 2001ல் இருந்துஇன்றைய தேதி வரை ராதாகிருஷ்ணன் இறந்த பிறகு அவருடைய வாரிசுதாரர்களாகிய பாஸ்கரன் மற்றும் யுவராஜ் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. யசோதம்மாள் ஒரு மனையை கிரையம் வாங்கியுள்ளார் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. ஆனால் கிரையம் பெற்றது தெரியும்.

12. என் கணவரிடமிருந்து புருஷோத்தமன் கிரைய ஒப்பநதம் பெற்றதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. என் கணவருக்குதான் தெரியும். மேற்படி தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arani.